

மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் கருங்குழி பகுதியில் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர,பகுதி, பேரூர், மற்றும் கருங்குழி பேரூர் நிர்வாகிகளுடன் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி மாவட்ட கழக செயலாளர்கள் தா.மோ.அன்பரசன், க.சுந்தரம், முன்னிலையில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் க. செல்வகணபதி எம்.பி, ஆ.கிருஷ்ணசாமி, தாயகம் கவி, ப.அப்துல் மாலிக், சி.ஜெரால்டு மற்றும் கரூர் பேரூர் கழக செயலாளர் சுந்தரமூர்த்தி, திருவள்ளூர் மத்திய மாவட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

### ஜெம் வீரமணி தொடர்பான வழக்கை கைவிடவில்லை!

### “மேல்விசாரணை தொடரும்” என்றுதான் குறிப்பாணை தாக்கல்! இடைத்தேர்தலில்

# மக்களின் கவனத்தை திசை திருப்ப தவறான தகவலைப் பரப்புகிறார் நிர்மல் குமார்!

## கழக சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ கடும் கண்டனம்!

சென்னை, செப்.22-

கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ அளித்த பேட்டி வருமாறு:-

இன்று சட்ட அமைச்சர் நிர்மல் குமார் அவர்கள், ஜெம் கிரானைட் வீரமணி அவர்களுடைய போக்சோ வழக்கைப் பற்றி, தன்னுடைய அரசியல் சுயலாபத்திற்காகவும், வரக்கூடிய இடைத்தேர்தல்களில் அரசியல் லாபம் தேடுவதற்காகவும் தவறான கருத்துகளை மக்களிடையே பரப்பியதால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டத்துறையின் சார்பில் இந்த விளக்கத்தை அளிக்கிறோம்.

தொடர்ச்சியாக, நிர்மல் குமார் அவர்கள் தான் சட்ட அமைச்சர் என்பதை மறந்து, மக்களுக்காகப் பணியாற்ற வேண்டிய பணியை மறந்து, மக்களுக்கு உண்மை நிலவரத்தை மட்டுமே தர வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியை மறந்து, அரசியல் லாபங்களுக்காகவும், இடைத்தேர்தலில் எப்படியாவது மக்கள் கவனத்தைத் திசைதிருப்புவதற்காகவும் இதுபோன்ற பேட்டிகளைத் தருவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

குறிப்பாகச் சொல்லப்போனால், கழகத் தலைவர் அவர்களைப் பற்றி, அவர் மிசாவில் அனுபவித்த கொடுமைகள் குறித்து மிகவும் அவதூறான தகவல்களைப் பதிவு செய்தார். அதற்காக மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா அவர்கள் ஏற்கனவே காவல்துறைத் தலைவரிடம் ஒரு புகார் கொடுத்துள்ளார்.

#### முற்றிலும் தவறான கருத்து!

இன்றைக்கு ஜெம் கிரானைட் வீரமணி அவர்கள் மீது பதியப்பட்டுள்ள போக்சோ வழக்கை குறித்து, அது ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நீர்த்துப்போகச் செய்ததாக ஒரு கருத்தைப் பரப்பியிருக்கிறார். அது முற்றிலும் தவறான கருத்தாகும்.

ஏனென்று சொன்னால், 7.10.2025ல் பதிவு செய்யப்பட்ட அந்த வழக்கு அப்போது காவல்துறையினரால் விசாரிக்கப்பட்டு, வீடுகள் சோதனையிடப்பட்டு, கிடைத்திருந்த ஆதாரங்களை வைத்து மேல்விசாரணை செய்து, உரிய ஆதாரங்கள் கிடைக்காததால், நீதிமன்றத்தில் இதுவரை செய்த புலன் விசாரணையில் உரிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இந்த வழக்கை நாங்கள் கைவிடவில்லை. உரிய ஆதாரங்களைத் திரட்டும் வரை இந்த வழக்கினுடைய மேல்விசாரணையைத் தள்ளி வைத்திருக்கிறோம் என்றுதான் குறிப்பிட்டு, போக்சோ நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்திருக்கிறார்கள்.

அதுவும் கூட, அப்போது இருந்த டைரக்டர் ஆஃப் பப்ளிக் பிராசிகியூஷன், அடிஷனல் டைரக்டர் ஆஃப் பப்ளிக் பிராசிகியூஷன் ஆகியோருடைய கருத்துருவின் அடிப்படையில் அது தாக்கல் செய்யப்பட்டது. எனவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்த வழக்கின் புலன் விசாரணை கைவிடப்படவில்லை. மேல்விசாரணை தொடரும் என்றுதான் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இதை மறைத்து, அவதூறான கருத்துகளை சட்ட அமைச்சர் பரப்பி வருகிறார். குறிப்பாகச் சொல்லப்போனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலைப்பாடு என்னவென்றால், குற்றம் புரிபவர்கள் யாராக இருந்தாலும், குறிப்பாக பாலியல் வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும், உரிய



தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

இதுபோன்ற வழக்குகளில் ஆதாரமற்ற செய்திகளைப் பரப்புவதே, திரு. நிர்மல் குமார் அவர்கள் எப்படியாவது குற்றம் சாட்டப்பட்டவர்களைக் காப்பாற்றிவிடலாமா என்ற எண்ணத்தோடு பேசுவதாகத்தான் தெரிகிறது. ஏனென்று சொன்னால், இல்லாத அரசியல் அழுத்தங்களை இருப்பதாகச் சொன்னால், பாதிக்கப்பட்ட அந்த நபர்கள், இந்த வழக்கில் ஏதோ மிகப்பெரிய பிரச்சனை இருப்பது போல் இருக்கிறது என்று கருதி, அவர்கள் சாட்சியம் அளிக்காமல் அதிலிருந்து விலகிச் செல்வதற்காகவே, திரு. நிர்மல் குமார் அவர்கள் குற்றம் சாட்டப்பட்ட நபர்களைக் காப்பாற்றுவதற்காகவே இந்த அறிக்கையை வெளியிடுவதாக நாங்கள் நம்புகிறோம்.

அதுமட்டுமல்ல, தமிழக வெற்றிக் கழகம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, ஒரு நாளைக்கு இரண்டு பாலியல் குற்றங்களாவது புகார்களாக அளிக்கப்பட்டு வருகின்றன.

சொல்லப்போனால், என் கையில் இருக்கும் பட்டியலில் தமிழக வெற்றிக் கழக ஆட்சியில் நடந்திருக்கக்கூடிய பாலியல் குற்றங்களைப் பற்றி சொன்னால், அதற்கு ஒரு நாள் கூடப் போதாது.

#### குற்றவாளிகளை காப்பாற்றும் நோக்கில் சட்ட அமைச்சர்!

ஆட்சிக்கு வந்த 150 நாட்களில் இதுவரை 219 பாலியல் குற்றங்கள் அரங்கேறியிருக்கின்றன. வேறு யாரோ அல்ல; தமிழக வெற்றிக் கழகத்தினுடைய பொறுப்பாளர்கள் அவர்களே பாலியல் குற்றங்களில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சொல்லப்போனால், ஒரே ஒரு நாளில் மட்டும், 15ஆம் தேதி ஜூன் 2026ல் மட்டும், ஏறக்குறைய ஐந்து இடங்களில் சிறுமிகள் பாலியல் தொல்லைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்; பாலியல் குற்றங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், சட்டம்ஒழுங்கைப் பற்றி கவலைப்படாமல், அரசியல் லாபத்திற்காக குற்றம் சாட்டப்பட்டவர்களைக் காப்பாற்றும் நோக்கத்தில் மட்டுமே சட்ட அமைச்சர் இதுபோன்ற பேட்டிகளை அளித்து வருகிறார். சட்ட அமைச்சர் தன்னுடைய பொறுப்பை உணர்ந்து கொண்டு பேச வேண்டும்.

போக்சோ போன்ற சிறப்பு வழக்குகள் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டியவை. அவற்றில் இந்தக் குற்றங்கள் பற்றி பொதுவெளியில் பேசி, அந்தக் குற்றங்களை நீர்த்துப்போகச் செய்வது என்பது சட்டம்ஒழுங்குக்கு நல்லதல்ல. இதுபோன்று திசைதிருப்பும் வேலைகள் அந்த வழக்கை நீர்த்துப்போகச் செய்யும். அது கூடத் தெரியாமல் இருக்கிறார் ஒரு சட்ட அமைச்சர்.

மேலும், சட்ட அமைச்சர் தான் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் என்று நினைத்துக்கொண்டு பேசுகிறார். அவதூறு செய்தால், அவதூறு பரப்பினால், அவரும் அவதூறு செய்த குற்றத்திற்கு உட்பட்டவர்தான். அதற்கான உரிய நடவடிக்கையை திராவிட முன்னேற்றக் கழகம் தொடரும்.

நான் இதுவரை சொன்னதில், குறைந்தபட்சம் மூன்று சிறுமிகளாவது பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த வழக்குகளில் உரிய நடவடிக்கை எடுக்காத தமிழக வெற்றிக் கழக அரசு, இல்லாத கூற்றுகளைச் சொல்லி வழக்கை நீர்த்துப்போகச் செய்வது உண்மையிலேயே கண்டனத்துக்குரியது. தமிழகத்தின் நலனுக்கு உகந்ததல்ல என்பதால் கவலைக்குரியது.

இந்தப் போக்கை தமிழக அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கிற அனைவரும் கைவிட வேண்டும் என்பதை நாங்கள் அழுத்தமாகப் பதிவு செய்கிறோம்.

#### ஆதாரத்தோடு நிரூபிக்க வேண்டும்!

இப்படியே மீறிச் சென்றால், வெறுமனே அவதூறு வழக்கு மட்டுமல்லாமல், போக்சோ வழக்கைத் திசைதிருப்பியதற்காகவும், குற்றவாளிகளைத் தப்பவைப்பதற்கு ஒரு வழியாக இருந்ததற்காகவும், அதற்குக் காரணமாக இருந்ததற்காகவும், உரிய பிரிவுகளில் அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த வழக்கு விவகாரத்தில் அதிகாரிகளுக்கு பணம் வழங்கப்பட்டிருந்தால், அது ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வரும். அவர்களிடம் உரிய ஆதாரங்கள் இருந்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தொடர்பு இருக்கிறது என்பதை அவர் ஆதாரத்தோடு நிரூபிக்க வேண்டும். அப்படி நிரூபிக்கவில்லை என்றால், அவர் பொதுவெளியில் மன்னிப்பு கேட்க வேண்டும். மன்னிப்பு கேட்கவில்லை என்றால், அவர் மீது உரிய வழக்கைத் தொடருவோம்.

கேள்வி: முன்னாள் முதலமைச்சர், தி.மு.க. தலைவர் சந்தித்தது குறித்து...

பதில்: நீங்கள் அரசு ஆவணங்களில் பார்த்தால், கொரோனா காலகட்டத்தில் முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு அனைத்து தொழில் புரிவோரும், தொழில் முனைவோரும், சாதாரண மக்களும் பணம் வழங்கினார்கள். அதுபோன்று, ஒரு நாள் கொரோனா நிவாரண நிதியாக திரு. வீரமணி அவர்கள் பணம் கொடுத்திருக்கிறார் என்பதை அறிகிறோம். அதைத் தவிர்த்து, வேறு எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர் எங்கள் கழகத் தலைவரைச் சந்திக்கவில்லை என்பதை நாங்கள் உறுதியாகச் சொல்லிக் கொள்கிறோம்.

இதுபோன்ற மோசமான குற்றங்களை கடுமையாக விசாரிப்பதை வரவேற்கிறோம். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அதைத் திசைதிருப்பும் விதமாகப் பேட்டிகள் அளிப்பதைத் தான், பொறுப்புள்ள அமைச்சர்களே பேசுவதைத்தான் கண்டிக்கிறோம். அது கண்டனத்திற்குரியது; தண்டனைக்குரியது.

இவ்வாறு என்.ஆர்.இளங்கோ தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், திராவிட முன்னேற்ற கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, சென்னை மேற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம், வெள்ளாப்புத்தூர் பகுதி, சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணிக்கு ஒதுக்கப்பட்ட பாகம் எண்.43ல் களப்பணியாற்றுவது குறித்து சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் மாணவர் அணி நிர்வாகிகளுக்கு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நமது வேட்பாளரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றி பெறச் செய்வது குறித்து விரிவாக ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய், அணியின் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

### மாவட்டக் கழகச் செயலாளர்கள் தா.மோ.அன்பரசன் – க.சுந்தர் முன்னிலை!

# மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட வையாவூர் - சூரை - அண்டவாக்கம் - புதுப்பட்டு - நெல்லி - குன்னங்குளத்தூர் ஊராட்சிகளின் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. அறிவிப்பு!



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து, சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வையாவூர், சூரை, அண்டவாக்கம், புதுப்பட்டு, நெல்லி, குன்னங்குளத்தூர் ஆகிய ஊராட்சிகளின் பொறுப்பாளர்கள் (உள்ளூர்) ஆலோசனைக் கூட்டம் இன்று (22.09.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 4.00 மணியளவில், மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட புழுதிவாக்கம் கூட்டு ரோடு அருகில் அமைந்துள்ள சென்னை கிழக்கு மாவட்ட தேர்தல் பணிமனையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர், மதுராந்தகம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சத்திய சாய்நாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட 7, 8, 33, 34, 35, 36, 37, 38, 57, 58 ஆகிய பாகங்களின் பொறுப்பாளர்களும், அந்தந்த பாகங்களில் தேர்தல் பணியாற்றும் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட பாகப் பொறுப்பாளர்களும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- கழக வேட்பாளர் வாக்கு சேகரிப்பு வருகை குறித்தும், சிறப்புப் பேச்சாளர்களின் வருகை குறித்தும் மற்றும் தேர்தல் தொடர்பான பணிகள் குறித்தும் ஆலோசித்தல்.

**பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ.**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.
சென்னை கிழக்கு மாவட்ட தேர்தல் பணிக்குழு

### சென்னை பல்கலைக்கழக மாணவர் நவீனின் சேர்க்கை ரத்து:

# பல்கலை நிர்வாகத்தின் நடவடிக்கைக்கு கடும் கண்டனம்!

## பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா அறிக்கை!

சென்னை, செப்.22-

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா விடுத்த அறிக்கை வருமாறு:-

சென்னை பல்கலைக்கழகத்தில் முதுகலைப் படிப்பில் முறையாகச் சேர்ந்து, கட்டணம் செலுத்தி, கடந்த இரண்டு மாதங்களாக வகுப்புகளிலும் பங்கேற்று வந்த புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி (பு.மா.இ.மு.) அமைப்பைச் சேர்ந்த தலித் மாணவர் தீரன் என்கிற நவீனின் சேர்க்கை திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் அதிர்ச்சியளிக்கிறது.

மாணவர் நவீனின் கடந்த கால அரசியல் செயல்பாடுகளை மனதில் கொண்டே அவரது சேர்க்கை ரத்து செய்யப்பட்டுள்ளதாக சக மாணவர்கள் குற்றம்சாட்டுகின்றனர். இது உண்மையெனில், ஒரு மாணவரின் அரசியல் கருத்து அல்லது செயல்பாடுகளின் அடிப்படையில் அவரது கல்வி உரிமையைப் பறிக்கும் மிகவும் கவலைக்குரிய நடவடிக்கையாகும்.



முறையாகக் கட்டணம் செலுத்தி, இரண்டு மாதங்களாக வகுப்புகளுக்குச் சென்று வந்த ஒரு மாணவரின் சேர்க்கையை திடீரென ரத்து செய்வதற்கு முன்பு, அவருக்கு எதிராக ஏதேனும் குற்றச்சாட்டு இருந்தால் அது குறித்து முறையான விசாரணை நடத்தப்பட்டிருக்க வேண்டும். மாணவருக்கு உரிய விளக்கமளிக்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். எந்தவிதமான நடைமுறை விசாரணையும் இல்லாமல் எடுக்கப்படும் நடவடிக்கை கல்வி நிறுவனங்களின் நியாயமான நிர்வாக நடைமுறைகளுக்கு எதிரானதாகும்.

மேலும், மாணவர் நவீன் விடுதியில் இடம் கோரி பல்கலைக்கழகப் பதிவாளரிடம் எழுத்துப்பூர்வமாகக் கோரிக்கை வைத்ததுதான் அவரது சேர்க்கை ரத்து செய்யப்பட்டதற்கான அடிப்படையாக இருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது உண்மையெனில், விடுதி வசதி கோரியதற்காகவே ஒரு மாணவரின் கல்வி எதிர்காலத்தைப் பாதிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது மிகவும் அநீதியானதாகும்.

மாணவர்கள் சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகள் குறித்து சிந்திப்பதும், ஜனநாயக ரீதியாக தங்களது கருத்துகளை வெளிப்படுத்துவதும் அவர்களின் குடிமை உணர்வின் ஒரு பகுதியாகும். மாணவர் அரசியல் செயல்பாட்டை ஒடுக்குவதற்காக கல்வி நிறுவனங்களின் அதிகாரம் பயன்படுத்தப்படக் கூடாது.

எனவே, மாணவர் நவீனின் சேர்க்கை ரத்து செய்யப்பட்டதற்கான காரணத்தை சென்னை பல்கலைக்கழக நிர்வாகம் வெளிப்படையாக விளக்க வேண்டும். இந்த விவகாரம் குறித்து உரிய முறையில் விசாரணை நடத்தி, மாணவருக்கு நியாயமான வாய்ப்பு வழங்க வேண்டும். அவரது கல்வி பாதிக்கப்படாத வகையில் உடனடியாக சேர்க்கையை மீண்டும் வழங்கி, தொடர்ந்து தனது முதுகலைப் படிப்பை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு மாணவரின் கல்வி உரிமை எந்தவொரு அரசியல் கருத்து வேறுபாட்டிற்கும் பலியாகிவிடக் கூடாது. சென்னை பல்கலைக்கழக நிர்வாகம் இந்த விவகாரத்தில் உடனடியாக தலையிட்டு நியாயமான தீர்வை வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### மீனவர்களை வெளியேற்றி தலைமைச் செயலகம் அமைக்க அனுமதிக்க மாட்டோம்

# முதல்வருக்கு தெரியாமல் அரசாணை வெளியானதா?

## மார்க்சிஸ்ட் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் கேள்வி

சென்னை, செப்.22-

மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் சண்முகம் சென்னையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:

சீனிவாசபுரத்தில் தலைமைச் செயலகத்தை அமைப்பது தொடர்பான அரசாணை முதல்வருக்கே தெரியாமல் வந்தது என்றால் அதற்கு காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது முதல்வரின் ஒப்புதலோடு தான் வந்திருக்கிறது என்றால் அது தவறான முடிவு. ஆகவே இடத்தை மாற்ற வேண்டும் என்கிற நியாயமான கோரிக்கையை நாங்கள் முன்வைக்கிறோம். மாற்று இடங்களை சொல்லியிருக்கிறோம். இது தமிழகத்தின் நலன், மக்களுடைய நலனில் வைக்கக்கூடிய கோரிக்கை. இது தவெக இல்லாமல் வேறு யார் ஆட்சி இருந்தாலும் இதே கோரிக்கையைத் தான் எழுப்பியிருப்போம். ஆகவே தவெகவுக்கு எதிரான போராட்டமோ, கோரிக்கையோ அல்ல.

தலைமை செயலகம், சட்டமன்றம், சட்டமன்ற உறுப்பினர் விடுதி போன்ற நிரந்தரமான கட்டுமானங்கள் பொருத்தமான இடத்தில்

பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையிலும் பொருத்தமான இடத்திலும் அமைக்கப்பட வேண்டும் என்பதுதான் எல்லோருடைய விருப்பம். இது மீனவர்களை பாதிக்கும் வகையில் அவர்களை வெளியேற்றி தலைமை செயலகம் அமைக்க கூடாது என்பதை ஏற்கனவே தெளிவுபடுத்தியிருக்கிறேன். ஆகவே ஆதவ் அர்ஜுனா சொல்வது ஏற்புடைய கருத்து அல்ல. இது முதல்வருக்கோ சம்மந்தப்பட்ட துறை அமைச்சருக்கோ தெரியாமல் எப்படி வந்திருக்க முடியும்? ஆகவே அவர் இன்னும் இறுதியான முடிவு எடுக்கவில்லை என்று... எடுக்கவில்லை என்றால் முதல்வரை சொல்லசொல்லுங்க, இங்கே வராது அல்லது இது சம்பந்தமாக ஆய்வில் இருக்கிறது, இந்த மாதிரியான எந்த கருத்தும் அரசின் தரப்பிலிருந்து வரவில்லை. ஆகவே நாங்கள் ஒரு மாற்று இடத்தை... இந்த இடத்தில் வருவதற்குஅனுமதிக்கமாட்டோம் என்பதை சமாளிப்பதற்காக ஆதவ் அர்ஜுனா அந்த மாதிரியான



கருத்தை தெரிவித்திருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். எல்லா ஆட்சி காலத்திலயும் எங்களுடைய எதிர்ப்பு எப்போதுமே

இருந்து வந்திருக்கிறது. கடந்த ஆட்சியில் பல் லாவரம் அருகில் அனகாபுத்தூர் வீடுகள் இடிக்கப்பட்ட போது, நேரடியாக சென்று தடுத்து நிறுத்துவதற்கான

போராட்டத்தை நடத்தியது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி. நானே நேரடியாக போயிருக்கேன். சேப்பாக்கம் திருவல்லிக்கேணியில் உயர் நீதிமன்ற உத்தரவு என்கிற பெயரில் குடிசைகள் அப்புறப்படுத்தப்பட்ட போது, அப்போதைய மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் நேரடியாக களத்துக்கு சென்றும், சட்டமன்றத்திலும் அந்த பிரச்னையை எழுப்பினோம். அதே போல கேபி பார்க்... இந்த மாதிரி நிறைய உதாரணமா சொல்லிட்டே போக முடியும். அதே மாதிரி சாம்சங் தொழிலாளர்களுடைய போராட்டம் என்றென்றைக்கும் வரலாற்றில்இடம் பெற்றிருக்கிற போராட்டம். இதுபோன்று பல்லாயிரக்கணக்கான போராட்டங்களை நடத்தியிருக்கிறோம். இப்போது எங்களது கோரிக்கை நியாயமா என்பதைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, அரசாங்கத்தை எதிர்த்து நடத்தினோமா என்பது அல்ல. இது திசை திருப்புகிற தந்திரமே. எந்த கோரிக்கையை முன்வைத்து போராட்டம் நடத்துகிறோமோ அது நியாயமா இல்லையா என்று விவாதித்தால்தான் அது பொருத்தமானதாக இருக்குமே தவிர, ‘ஏன் அப்ப செய்யல, ஏன் முந் தாநாள் செய்யல’ என்று கேட்பதெல்லாம் பிரச்சனையை திசை திருப்புகிற ஒரு தந்திரம்.

இவ்வாறு தெரிவித்தார்



மதுராந்தகம் சட்டப்பேரவை இடைத்தேர்தல் பணிகளின் ஒரு பகுதியாக, முன்னாள் அமைச்சரும் கழக தேர்தல் பணிக்குழுத் தலைவரும் முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கீழாமூர் ஊராட்சியில் கழகத்தின் ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகள் மற்றும் ஊராட்சியைச் சார்ந்த மக்களுடன் கலந்துரையாடினார். இந்த சந்திப்பின்போது மாதவரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் ஒன்றிய அவைத்தலைவர் சிவபெருமாள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.